DEPOSITION OF WITNESS

IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,
TENKASI.

**GWOP.No.** 292/2023

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி. பொன்சுதா **Rw1** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 9th day of October 2025.

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த மனுவில் எதிர்மனுதாரர் ஆவேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கிறேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொன்னவை தான். அத்துடன் 6 ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். அவை 1) செங்கோட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு பிறப்பிக்கப்பட்ட DVC No. 12/2022. Dtd. 12.01.2024 வழக்கின் உத்தரவின் நகல் எ.ம.சா.ஆ. 1 ஆகும். 2)செங்கோட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு பிறப்பிக்கப்பட்ட MC No. 16/2022. Dtd. 24.11.2023 வழக்கின் உத்தரவின் நகல் எ.ம.சா.ஆ. 2 ஆகும். 3) மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு பிறப்பிக்கப்பட்ட HCP No. 1072/2024, Dtd. 17.07.2023 வழக்கின் உத்தரவின் நகல் எ.ம.சா.ஆ. 3 ஆகும்.

4) தென்காசி கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள HMOP No. 25/2021 வழக்கில் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் நகல் எ.ம.சா.ஆ. 4 ஆகும். 5) தென்காசி கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள HMOP No. 25/2021 வழக்கில் மேற்படி குழந்தைகளின் custody கேட்டு மனுதாரர் தாக்கல் செய்த IA No. 01/2023 மனுவில் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் நகல் எ.ம.சா.ஆ. 5 ஆகும். 6) தென்காசி கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள HMOP No. 25/2021 வழக்கில் மேற்படி குழந்தைகளின் custody கேட்டு மனுதாரர் தாக்கல் செய்த IA No. 01/2023 மனுவை கடந்த 01.09.2023 ம் தேதியன்று மேற்படி நீதிமன்றம் தள்ளுபடி செய்ததை காட்டும் online Ecourts Diary யின் இணையதள நகல் எ.ம.சா.ஆ. 6 ஆகும். மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

**குறுக்குவிசாரணை இன்று இல்லை.**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi